**ஆகஸ்ட் – 25**

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## நீர்மின் நிலையங்கள் நவீனமயமாக்கல்

- மின்சாரத் தேவையை பூர்த்தி செய்வதற்கும் மற்றும் மின் கட்டமைப்பின் நம்பகத் தன்மையை மேம்படுத்துவதற்கும் தமிழ்நாடு நீர்மின் திட்டங்களை மேம்படுத்தியும் மின்கலச் சேமிப்பை விரிவுபடுத்தியும் வருகிறது.
- 2026-27 ஆம் ஆண்டிற்கு, தமிழ்நாடு பசுமை ஆற்றல் கழகம் (TNGECL) 4,776 மில்லியன் யூனிட்டுகள் (MU) நீர்மின் உற்பத்தியை இலக்காகக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு பசுமை ஆற்றல் கழகம் 107 இயந்திரங்களுடன் 47 நீர்மின் நிலையங்களை இயக்கி வருகிறது, இதன் மொத்த நிறுவப்பட்ட திறன் 2,325.90 மெகாவாட் (MW) ஆகும்.
- மாயாறு மற்றும் கோதையாறு உள்ளிட்ட பழைய மின் நிலையங்களில் புனரமைப்பு, நவீனமயமாக்கல் மற்றும் திறன் மேம்படுத்துதல் (RMU) பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 2026 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் ஆறு துணை மின் நிலையங்களில் 1,000 மெகாவாட்-மணி (MWh) மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளை (BESS) அமைக்கும் பணிகளை மாநில அரசு மேற்கொண்டு வருகிறது.
- மேலும் 11 துணை மின் நிலையங்களில் 1,500 மெகாவாட்-மணி (MWh) மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளை (BESS) அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது, இது 2027 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் செயல்பாட்டிற்கு வரும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.




## ஐந்தாம் நூற்றாண்டு நடுகல்

- தமிழ்நாட்டின் தென்காசி மாவட்டம் மலையடிப்பட்டி கிராமத்தில் சங்க காலத்தைச் சேர்ந்த 5 ஆம் நூற்றாண்டு நடுகல் கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மாநிலத் தொல்லியல் துறை (TNSDA) மேற்கொண்ட அகழாய்வின் போது இந்தக் கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டது.
- சங்க காலத்தில் பயன்பாட்டில் இருந்து, பின்னர் கற்கள் மற்றும் செங்கற்களால் நிரப்பப்பட்ட படிக்கட்டுகளுடன் கூடிய செங்கல் கிணற்றுக்குள் இந்த நடுகல் கண்டெடுக்கப் பட்டது.

- இந்த நடுகல் 1 மீட்டர் நீளமும் 0.30 மீட்டர் அகலமும் கொண்டது மற்றும் நான்கு வரிகள் கொண்ட கல்வெட்டைக் கொண்டுள்ளது.
- இதன் எழுத்துக்கள் தமிழ்-பிராமி எழுத்து முறையில் இருந்து வட்டெழுத்துக்கு மாறிய இடைநிலைக் காலத்தைக் குறிக்கிறது.
- இந்த கல்வெட்டு கறுக்கன், சூளகன், நன்னன் மற்றும் கொடியன் ஆகியோரைக் குறிப்பிடுகிறது மற்றும் இது கறுக்கன் சூளகனின் மகனான நன்னன் கொடியனின் நினைவாக நடப்பட்டதைச் சுட்டிக்காட்டுகிறது.
- சங்க காலம் மற்றும் சங்கம் மருவிய கால நடுகற்களில் பொதுவாக போர்வீரர்களின் உருவங்கள் காணப்படாது என்றும், இந்த நடுகல்லிலும் போர்வீரரின் உருவம் பொறிக்கப் படவில்லை என்றும் தொல்லியலாளர்கள் தெரிவித்தனர்.
- போர்வீரர்களின் உருவங்கள் இல்லாத பிற சங்க கால நடுகற்கள் புலிமான்கோம்பை, அப்பனூர் மற்றும் மல்லிகாபுரம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- மலையடிப்பட்டியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் சங்க கால மக்களின் வாழ்க்கை, தொழில்கள் மற்றும் வணிகம் குறித்த தகவல்களை வழங்கும் தொல்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.




## புனித ஜார்ஜ் கோட்டை பாரம்பரிய மறுசீரமைப்பு

- தமிழ்நாட்டின் சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள 230 ஆண்டுகள் பழமையான எக்ஸ்சேஞ்ச் கட்டிடத்தை (பரிவர்த்தனை கட்டிடம்) மறு சீரமைக்க உள்ளதாக இந்திய தொல்லியல் ஆய்வுத் துறை (ASI) அறிவித்துள்ளது.
- இந்தக் கட்டிடத்தில் காலனித்துவ கால அருங்காட்சியகம் ஒன்றும் உள்ளது என்பதுடன் இது மறுசீரமைப்புப் பணிகளுடன் சேர்த்து புதுப்பிக்கப்படும்.
- எக்ஸ்சேஞ்ச் கட்டிடம் 1795 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு, தொடக்கத்தில் மதராஸ்

வங்கியைக் கொண்டிருந்தது; இதன் மேல் கூடம் பொது பரிவர்த்தனை கூடமாக செயல்பட்டது.

- ❖ இந்த அருங்காட்சியகத்தில் காலனித்துவ கால ஆயுதங்கள், நாணயங்கள், பதக்கங்கள், சீருடைகள், ஆவணங்கள் மற்றும் இந்தியா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த பிற வரலாற்றுத் தொல்பொருட்கள் உள்ளன.
- ❖ 17 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியால் நிறுவப்பட்ட புனித ஜார்ஜ் கோட்டை, சென்னையின் ஒரு முக்கியமான வரலாற்று அடையாளமாகும்.




## தேசியச் செய்திகள்

### புதிய பாதுகாப்பு உள்நாட்டுமயமாக்கல் பட்டியல்




- ❖ ₹3,070 கோடி மதிப்பிலான வணிகத் திறனைக் கொண்ட, உத்திசார் ரீதியாக முக்கியமான 405 பாதுகாப்பு உபகரணங்களை உள்ளடக்கிய 6-வது நேர்மறையான உள்நாட்டுமயமாக்கல் பட்டியலை (PIL) பாதுகாப்பு உற்பத்தித் துறை (DDP) அறிவித்து உள்ளது.
- ❖ இதில் 389 உபகரணங்கள் பாதுகாப்புப் பொதுத்துறை நிறுவனங்களுக்கானவை (DPSUs) மற்றும் 16 உபகரணங்கள் இந்தியக் கடலோரக் காவல்படைக்கானவை (ICG) ஆகும்.
- ❖ இந்தப் பட்டியலில் Su-30MKI, இலகுரக போர் விமானம் (LCA), T-72, T-90 மற்றும் போர்க் கப்பல்களில் பயன்படுத்தப்படும் வரிசை மாற்றக்கூடிய அலகுகள் (LRU), துணை

அமைப்புகள், உதிரிபாகங்கள், கூறுகளும் மற்றும் மூலப்பொருட்களும் அடங்கும்.

- இந்த உபகரணங்கள் 'மேக்' நடைமுறைகள் மற்றும் உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) மூலம் உள்நாட்டுமயமாக்கப்படும், பின்னர் அவை இந்திய விற்பனையாளர்களிடமிருந்து, குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) மற்றும் புத்தொழில் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும்.
- இறக்குமதிப் பதிலீடு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்பட்ட SRIJAN பாதுகாப்பு இணையதளத்தில் இதற்கான விவரங்கள் மற்றும் காலக்கெடு கிடைக்கின்றன.

## லடாக் அமர்வு




- ஒன்றியப் பிரதேசமான (UT) லடாக்கில் ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் உயர் நீதிமன்றத்தின் நிரந்தர அமர்வை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- தற்போது இந்த உயர் நீதிமன்றம் ஸ்ரீநகர் மற்றும் ஜம்முவில் அமர்வுகளைக் கொண்டு உள்ளது; லடாக் அமர்வு இதன் மூன்றாவது நீதித்துறை மையமாக மாறும்.
- இந்த அமர்வு ஜம்மு அல்லது ஸ்ரீநகருக்குச் செல்வதைக் குறைப்பதன் மூலம், லடாக்கின் தொலைதூரப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு நீதிக்கான அணுகலை மேம்படுத்தும்.
- 2026 ஆம் ஆண்டு ஜூலை 30 நிலவரப்படி, உயர் நீதிமன்றத்தில் 44,557 வழக்குகள் நிலுவையில் உள்ளன, இதில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள 6,100-க்கும் மேற்பட்ட வழக்குகளும் அடங்கும்.
- முன்னாள் ஜம்மு காஷ்மீர் மாநிலம் மறுசீரமைக்கப்பட்ட பிறகு, 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 31 அன்று லடாக் ஒரு ஒன்றியப் பிரதேசமாக மாறியது.
- ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் உயர் நீதிமன்றமானது, ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய ஒன்றியப் பிரதேசங்களுக்கான பொதுவான உயர் நீதிமன்றமாகும்.
- பம்பாய் உயர் நீதிமன்றம் மும்பையில் அதன் முதன்மை அமர்வையும், நாக்பூர், அவுரங்காபாத், பனாஜி மற்றும் கோலாப்பூர் ஆகிய இடங்களில் பிற அமர்வுகளையும் கொண்டு மொத்தம் ஐந்து மையங்களில் செயல்படுகிறது.

- அவுரங்காபாத் அமர்வு அதிகாரப்பூர்வமாக சத்ரபதி சாம்பாஜிநகர் அமர்வு என்று அழைக்கப் படுகிறது.
- பனாஜி அமர்வு கோவா மாநிலத்திற்கும், மற்ற இடங்கள் மகாராஷ்டிராவின் பல்வேறு பகுதிகளுக்கும் சேவை செய்கின்றன.
- முதன்மை அமர்விலிருந்து வெகு தொலைவில் வசிக்கும் மக்களுக்கு நீதியை எளிதில் கிடைக்கச் செய்யவே உயர் நீதிமன்ற அமர்வுகள் நிறுவப்படுகின்றன.
- 1861 ஆம் ஆண்டின் இந்திய உயர் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் 1862 ஆம் ஆண்டில் பம்பாய் உயர் நீதிமன்றம் நிறுவப்பட்டது.

## CAA குடியுரிமைச் செயலாக்கம்




- 2019 ஆம் ஆண்டின் குடியுரிமை திருத்தச் சட்டத்தின் (CAA) கீழ் நிலுவையில் உள்ள குடியுரிமை விண்ணப்பங்களை பரிசீலிக்க எட்டு மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களைச் சேர்ந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) அதிகாரம் அளித்துள்ளது.
- அந்த எட்டு அதிகார வரம்புகள் குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், மேற்கு வங்கம், அசாம் (பழங்குடியினர் பகுதிகள் தவிர), திரிபுரா (பழங்குடியினர் பகுதிகள் தவிர), ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகியவையாகும்.
- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று அறிவிக்கப்பட்ட குடியுரிமை (மூன்றாவது திருத்தம்) விதிகள், 2026 குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 6B-இன் கீழ் விண்ணப்பங்களைச் செயல்படுத்த ஆட்சியர்களுக்கு அனுமதி அளிக்கிறது.
- CAA சட்டமானது பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் வங்கதேசத்தில் இருந்து 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று அல்லது அதற்கு முன்னதாக இந்தியாவுக்குள் நுழைந்த இந்து, சீக்கிய, பௌத்த, சமண, பார்சி மற்றும் கிறிஸ்தவ சமூகங்களை உள்ளடக்கியது.
- ஆட்சியர்கள் ஆவணங்களைச் சரிபார்க்கவும், விசாரணைகளை மேற்கொள்ளவும்,

விசுவாசப் பிரமாணம் செய்து வைக்கவும் மற்றும் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு குடியுரிமை வழங்கவும் முடியும்.

- நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் முந்தைய அதிகாரம் பெற்ற குழுக்கள்/மாவட்ட அளவிலான குழுக்களிடமிருந்து சம்பந்தப்பட்ட ஆட்சியர்களுக்கு மாற்றப்படும்.

## ஜல் சக்தி தரவுப் பகிர்வுக் கொள்கை

- ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையானது தரவுப் பகிர்வு, இயங்குதன்மை மற்றும் பங்குதாரர்களின் அணுகல் தொடர்பான கொள்கையை புது தில்லியில் வெளியிட்டது.
- இந்தக் கொள்கையானது மத்திய அரசு, மாநிலங்கள், ஒன்றியப் பிரதேசங்கள், கிராம ஊராட்சிகள் மற்றும் ஊரக குடிநீர்த் துறையில் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுக்கான கூட்டாட்சி தரவுப் பகிர்வு கட்டமைப்பை உருவாக்குகிறது.
- இது பாதுகாப்பான மற்றும் சுமூகமான தரவுப் பரிமாற்றத்திற்கு பொதுவான அடையாளங்காட்டிகள், தரப்படுத்தப்பட்ட மீத்தரவு (metadata), இயங்கக்கூடிய பதிவேடுகள் மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் சேவைகளைப் பயன்படுத்துகிறது.
- கிராம ஊராட்சிகள் சொத்துக் கண்காணிப்பு, குறை தீர்த்தல் மற்றும் சேவைப் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் பெரும் பங்கு வகிக்கும்.
- இந்தக் கொள்கையானது, நோக்கம் சார்ந்த தரவு அணுகல் மூலம் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான பகுப்பாய்வு, புவியியல் ரீதியான திட்டமிடல், நீரின் தரக் கண்காணிப்பு மற்றும் டிஜிட்டல் ட்வின்ஸ் (Digital Twins) ஆகியவற்றை ஆதரிக்கிறது.
- இது ஊரக குடிநீர் சேவை வழங்கலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஜல் ஜீவன் திட்டம் (JJM) 2.0-இன் கீழ் உள்ள சுஜலம் பாரத் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பின் ஒரு பகுதியாகும்.




# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-பிரேசில் டிஜிட்டல் கூட்டாண்மை

- இந்தியா மற்றும் பிரேசில் இடையே புனேவில் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பங்கள் (ICT) தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது.

- இந்த ஒப்பந்தம் செயற்கை நுண்ணறிவு (AI), 5G, 6G, திறந்த ரேடியோ அணுகல் வலையமைப்பு (Open RAN), பொருட்களின் இணையம் (IoT) மற்றும் இணையப் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.
- டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு (DPI), நேரடியாகச் சாதனத்துடன் இணைக்கும் வசதி (Direct-to-Device connectivity), அலைக்கற்றை மேலாண்மை மற்றும் குறைந்த புவி சுற்றுப்பாதை (LEO) செயற்கைக்கோள்கள் ஆகியவற்றில் ஒத்துழைப்பதும் இதில் அடங்கும்.
- 12-வது பிரிக்ஸ் தகவல் தொடர்பு அமைச்சர்கள் கூட்டம் மற்றும் பிரிக்ஸ் ICT டிராக் கூட்டத்தின் போது இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இது 2026 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் பிரேசிலின் தகவல் தொடர்பு அமைச்சகங்களுக்கு இடையிலான இரண்டாவது இருதரப்பு ஒப்பந்தமாகும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஸ்விஃப்ட் மீட்புப் பணி

- மீட்பு விண்கலமான லிங்க் (LINK) கட்டுப்பாட்டுச் சமிக்ஞைகளைச் சந்தித்ததையடுத்து, நீல் கெஹ்ரெல்ஸ் ஸ்விஃப்ட் ஆய்வகத்தை மீட்கும் முயற்சியை நாசா கைவிட்டது.
- கேட்டலிஸ்ட் ஸ்பேஸ் (Katalyst Space) உருவாக்கிய லிங்க் மீட்பு விண்கலம், குறைந்து வரும் ஸ்விஃப்ட்டின் சுற்றுப்பாதையை உயர்த்துவதற்காக 2026 ஆம் ஆண்டு ஜூலை 3 அன்று விண்ணில் செலுத்தப்பட்டது.
- லிங்க்கின் சில எதிர்வினைச் சக்கரங்கள் பழுதடைந்ததால் அது கட்டுப்பாட்டை இழந்து சுழலத் தொடங்கியது; உந்துவிசைகள் மூலம் அதனை நிலைநிறுத்த எடுக்கப் பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.
- 2004 ஆம் ஆண்டில் விண்ணில் செலுத்தப்பட்ட ஸ்விஃப்ட், காமா கதிர் வெடிப்புகள் மற்றும் பிற அதிக ஆற்றல் கொண்ட பிரபஞ்ச நிகழ்வுகளை ஆய்வு செய்கிறது.

- சுற்றுப்பாதை உயர்த்தப்படாவிட்டால், 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஸ்விஃப்ட் மீண்டும் பூமியின் வளிமண்டலத்தில் நுழையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




# மாநிலச் செய்திகள்

## திலேப்பியா ஏற்றுமதி – சத்தீஸ்கர்




- மதிப்பு கூட்டப்பட்ட திலேப்பியா மீன் பொருட்களை ஏற்றுமதி செய்யத் தொடங்கிய இந்தியாவின் முதல் உள்நாட்டு மாநிலமாக சத்தீஸ்கர் உருவெடுத்துள்ளது.
- இந்த மாநிலம் 382 டன் திலேப்பியா தயாரிப்புகளை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்துள்ளது.
- பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனாவின் (PMMSY) கீழ் சத்தீஸ்கர் மீன்வளத் துறையில் சுமார் ₹900 கோடி முதலீடு செய்துள்ளது.
- குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் தொட்டிகள் போன்ற உள்நாட்டு நீர் வளங்களைப் பயன்படுத்தி மாநிலத்தின் மீன் உற்பத்தி சுமார் 10 லட்சம் டன்களை எட்டியுள்ளது.
- சத்தீஸ்கரின் ராய்ப்பூரில் திலேப்பியா தொகுப்பு குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

- திலேப்பியா என்பது நன்னீர் மீனாகும், இது குளங்கள், தொட்டிகள், கூண்டுகள் மற்றும் பிற மீன்வளர்ப்பு அமைப்புகளின் மூலம் பரவலாக வளர்க்கப்படுகிறது.

## அனலாக் பன்னீர் தடை - கர்நாடகா

- கர்நாடகா மாநிலம் முழுவதும் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 முதல் 2027 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 வரை ஓராண்டு காலத்திற்கு அனலாக் பன்னீரை "பன்னீர்" எனத் தயாரிப்பது, சேமித்து வைப்பது, விநியோகிப்பது மற்றும் விற்பனை செய்வதற்கு அம்மாநிலம் தடை விதித்துள்ளது.
- அனலாக் பன்னீர் என்பது பால் கொழுப்பு அல்லது பால் திடப்பொருட்களுக்கு பதிலாக தாவர எண்ணெய், தாவரக் கொழுப்பு அல்லது பால் அல்லாத பிற பொருட்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பால் அல்லாத ஒரு பொருளாகும்.
- 2006 ஆம் ஆண்டின் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டத்தின் கீழ், முக்கியமாக பிரிவுகள் 30(2)(a), 18 மற்றும் 29 ஆகியவற்றைப் பயன்படுத்தி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- பதப்படுத்தப்பட்ட பாலாடைக்கட்டி (சீஸ்), உறைந்த இனிப்புகள் மற்றும் கலப்புக் கொழுப்பு விரிப்புகள் போன்ற தனித்தனி உணவு வகைகளைக் கொண்ட தரப்படுத்தப்பட்ட பொருட்களுக்கு இந்தத் தடை பொருந்தாது.
- அனலாக் பன்னீரைக் கட்டுப்படுத்துவதில் இமாச்சலப் பிரதேசம், மகாராஷ்டிரா, குஜராத், சத்தீஸ்கர் மற்றும் மத்தியப் பிரதேசத்துடன் தற்போது கர்நாடகாவும் இணைகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★